தினமணி

# இயந்திரத்தின் மூலம் நடவு செய்ய வேளாண் துறை அழைப்பு

First Published : 23 Nov 2010 02:37:22 PM IST

காரைக்கால், அக். 22 : தொழிலாளர்கள் பற்றாக்குறை நிலவுவதால், இயந்திரத்தை பயன்படுத்தி நடவு செய்ய விவசாயிகள் முன்வர வேண்டும் என வேளாண் துறை அழைப்பு விடுத்துள்ளது.

வேளாண் துறை சார்பில், மாதூர் அரசு விதைப் பண்ணையில் நெல் நடவு இயந்திரத்தின் மூலம் நடவு செய்யும் செயல்முறை விளக்கம் வியாழக்கிழமை நடைபெற்றது.

செயல் விளக்கத்தை தொடங்கிவைத்து விவசாயிகளிடையே கூடுதல் வேளாண் இயக்குநர் கே. மதியழகன் பேசியது:

விவசாயத் தொழில் செய்ய தொழிலாளர்கள் அதிகளவு முன்வராத நிலையில், விவசாயப் பணிகள் குறித்த காலத்துக்குள் முடியவில்லை. இப்பிரச்னையை தீர்த்து உற்பத்தியை அதிகரிக்க விவசாய இயந்திர மயமாக்கல் இன்றியமையாததாகிறது.

குறிப்பாக நெல் நடவு இயந்திரத்தின் மூலம் ஒரு ஏக்கர் நடவு செய்ய 2 முதல் இரண்டரை மணி நேரம் ஆகிறது. விதை அளவு நாற்றாங்கால் தயாரித்தல் மற்றும் பராமரித்தல் போன்ற பணிகள் பாரம்பரிய நெல் நாற்றாங்கால் விட மிகவும் எளிதானது.

இயந்திரத்தின் மூலம் நடவு குறித்த நேரத்துக்குள் செய்து முடிக்கமுடியும். செலவும் மிக குறைவு. இயந்திரத்தின் மூலம் நடவு செய்வதால், நாற்றுக்கு தேவையான சூரிய ஒளி, காற்று மற்றும் சத்துக்கள், தொழிலாளர்கள் நடவு செய்யும்போது கிடைப்பதுபோன்று கிடைக்கின்றது.

இந்த இயந்திரங்கள் 50 சதவீத மானிய விலையிலும் கிடைக்கின்றன. இதற்கு தேவையான ஏற்பாடுகளை வேளாண் துறை செய்கிறது. விவசாயிகள் இயந்திரத்தின் மூலம் விவசாயப் பணிகளை மேற்கொள்ள முன்வர வேண்டும் என்றார்.

வேளாண் இணை இயக்குநர் என். ராஜேந்திரன், துணை வேளாண் இயக்குநர் கே. சிவசண்முகம் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். முகாம் ஏற்பாடுகளை விதைப் பண்ணை மேலாளர் ஆர். சரவணன் உள்ளிட்டோர் செய்திருந்தனர்.

**"உரம், பூச்சி மருந்துகளை கூடுதல் விலைக்கு விற்றால் நடவடிக்கை'**

First Published : 23 Nov 2010 02:28:48 PM IST

அரியலூர், அக். 22: அரியலூர் மாவட்டத்தில் விவசாயத்துக்கு தேவையான உரங்கள், பூச்சி மருந்துகளின் விலைகளை நிர்ணயிக்கப்பட்டதைக் காட்டிலும், கூடுதல் விலைக்கு விற்பனை செய்பவர்கள் மீது கடுமையான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றார் மாவட்ட ஆட்சியர் தி.க. பொன்னுசாமி.

அரியலூர் வட்டாட்சியர் அலுவலகக் கூட்ட அரங்கில் விவசாயிகள் குறைகேட்பு நாள் கூட்டம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் ரெ. பிச்சை, கூட்டுறவுச் சங்கங்களின் துணைப் பதிவாளர் ராமநாதன், வேளாண் இணை இயக்குநர் ரகுநாதன் உள்ளிட்ட அனைத்துத் துறை அலுவலர்கள் பங்கேற்றனர்.

கூட்டத்தில் விவசாயச் சங்கத்தின் தரப்பில், விளாங்குடி உழவர் ஆய்வு மன்றத் தலைவர் ஜயச்சந்திரன் பேசியது:

அரியலூர் மாவட்டம் தனியாகப் பிரிக்கப்பட்டாலும் இன்னும் பல அலுவலகங்கள் இங்கு இல்லை. அனைத்து அலுவலகங்களையும் இங்கு பெற்றுத் தர வேண்டும். பயிர் காப்பீடு செய்த விவசாயிகளுக்கு இன்னும் காப்பீட்டுத் தொகை வழங்கப்படவில்லை என்றார் அவர்.

அரியலூர் விவசாயச் சங்கத் தலைவர் பிச்சை பிள்ளை:

திருமானூர், திருமழப்பாடி பகுதிகளில் விவசாயப் பணிகள் அதிகம் நடைபெற்று வருகிறது. ஆனால், அந்தப் பகுதிகளில் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் இதுவரை திறக்கப்படாமல் உள்ளது. இதற்குரிய நடவடிக்கையை மாவட்ட நிர்வாகம் மேற்கொள்ள வேண்டும் என்றார் அவர்.

அம்பேத்கர் விவசாயிகள் சங்கத் தலைவர் எஸ்.ஆர். அம்பேத்கர் வழியன்:

புள்ளம்பாடி வாய்க்காலில் தண்ணீர் திறந்துவிடப்பட்டாலும், இன்னும் கடைமடைப் பகுதிகளுக்கு தண்ணீர் வந்து சேரவில்லை. இதனால், விவசாயிகள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மாவட்டத்தில் ராஜராஜன் 1000 நெல்சாகுபடி குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். பல இடங்களில் மின்சாரக் கம்பிகள் தொங்கிய நிலையில் உள்ளன. இதற்குரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார் அவர்.

இதற்குப் பதிலளித்து பொதுப் பணித் துறை (நீர்வள ஆதாரம்) உதவி செயற் பொறியாளர் சரவணன் பேசியது:

புள்ளம்பாடி வாய்க்காலில் திறந்துவிடப்பட்ட தண்ணீர் தற்போது வேட்டக்குடி பகுதிக்கு வந்துள்ளது. போதியளவு தண்ணீர் வந்தவுடன் கடைமடைப் பகுதிகளுக்கு போய்ச் சேரும் என்றார் அவர்.

மின்வாரியம் தொடர்பான கேள்விகளுக்கு அரியலூர் மின் வாரிய அதிகாரி பெ. விருத்தாசலம் பதிலளித்து பேசியது:

1995, மார்ச் 31 ஆம் தேதிக்கு முன்னதாக விண்ணப்பித்து காத்திருந்த விவசாயிகளுக்கு இலவச மின் இணைப்பு வழங்க அரசு உத்தரவிட்டுள்ளது. இதன்படி தகுதியுள்ள விவசாயிகள் எண்ணிக்கை கணக்கிடப்பட்டு வருகிறது. மேலும், திருமானூர், திருமழப்பாடி பகுதிகளில் மோட்டார் வாங்கி இணைப்புக்காக காத்திருக்கும் 1400 விவசாயிகளுக்கும் இணைப்பு வழங்க அரசு உத்தரவிட்டுள்ளது.

இதுவரை அரியலூர் மாவட்டத்துக்குத் தேவையான மின்சாரம் பெரம்பலூர் மாவட்டத்திலிருந்துதான் பெறப்பட்டு வந்தது.

இந்த நிலையில், அரியலூர் அருகே ரூ. 33 கோடியில் 110 கி.வோ. திறனுடைய துணை மின் நிலையம் அமைக்க அரசு உத்தரவிட்டுள்ளது என்றார் அவர்.

விவசாயிகளின் கேள்விகளுக்கும், கோரிக்கைகளுக்கும் பதிலளித்து மாவட்ட ஆட்சியர் தி.க. பொன்னுசாமி பேசியது:

சொட்டு நீர்ப் பாசனம் மூலம் விவசாயம் மேற்கொள்ளும் விவசாயிகளுக்கு கடன் வழங்குவதற்கு முன்னதாக, மாவட்ட நிர்வாகம் மானியம் வழங்கினாலும் பல வங்கிகளில் குறிப்பிட்ட காலத்துக்குப் பின்னர்தான் கடன் வழங்கப்படுகிறது என்ற தகவல்கள் வருகின்றன. அந்த நிலை இனி நடைபெறக் கூடாது. மானியம் வழங்கியுடனேயே கடன் தொகையையும் விவசாயிகளுக்கு வழங்க வேண்டும்.

விவசாயிகள் உற்பத்திப் பொருள்களை உழவர் சந்தை உள்ளிட்ட இடங்களுக்கு கொண்டு வருகின்றனர். அவ்வாறு வரும் போது பல இடங்களில் பேருந்துகளை நிறுத்தாமலும், பொருள்களை ஏற்றாமலும் வருவதாகப் புகார்கள் வருகின்றன. இந்த நிலை இனி தொடர்ந்தால், உரியவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்.

தற்போது விவசாயப் பணிகள் நடைபெறும் காலமாகும். இந்த நேரத்தில் விவசாயத் தொழிலாளர்களை நூறு நாள் வேலைத் திட்டப் பணிகள் நடைபெறும் பகுதிகளில் பணியமர்த்தக் கூடாது. விவசாயப் பணிகள் குறிப்பிட்ட நாள்களில் நடைபெற்றாக வேண்டும். ஆனால், நூறு நாள் வேலைத் திட்டப் பணிகளை எப்போது வேண்டுமானாலும் மேற்கொள்ளலாம்.

மாவட்டத்தில் உரங்கள், பூச்சி மருந்துகள் விற்பனை செய்ய அனுமதி பெற்றவர்கள், அரசால் நிர்ணயம் செய்யப்பட்ட விலைகளிலேயே விற்பனை செய்ய வேண்டும். கூடுதலான விலைக்கு விற்றால் அவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க நேரிடும் என்றார் ஆட்சியர்.

**சிறிய வெங்காயத்தில் விதை நேர்த்தி**

First Published : 23 Nov 2010 02:29:09 PM IST

பெரம்பலூர், அக். 22: பெரம்பலூர் மாவட்டத்தில் சாகுபடி செய்யப்படவுள்ள சிறிய வெங்காயத்தில் விதை நேர்த்தி செய்து நடவு செய்ய வேண்டும் என்றார் ஹேன்ஸ் ரோவர் வேளாண் அறிவியல் மைய தோட்டக்கலை தொழில்நுட்ப வல்லுநர் ஜெ. கதிரவன்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

பெரம்பலூர் மாவட்ட விவசாயிகள் தற்போது புரட்டாசி பட்டமாக சிறிய வெங்காயம் சாகுபடியை மேற்கொண்டுள்ளனர். சிறிய வெங்காயம் விதைக் காய்கள் எனப்படும் குமிழங்கள் மூலமாகவே பெரும்பான்மையான பகுதிகளில் சாகுபடி செய்யப்படுகிறது. நடவுக்கு தேர்ந்தெடுக்கப்படும் விதைக் காய்கள் தரமானதாகவும், நோய் தாக்குதல் இல்லாமலும் இருக்க வேண்டும். முளைத்த, நோய் தாக்குதலுக்கு உள்பட்ட கருமை நிறமாக மாறிய காய்களை அப்புறப்படுத்த வேண்டும்.

பின்னர், விதைக் காய்களை தார்ப்பாயின் மீது நன்கு பரப்பி, அதில் அரிசி கஞ்சியைத் தெளிக்க வேண்டும். பிறகு 1 கிலோ விதைக் காய்களுக்கு 5 கிராம் என்ற அளவில் முறையே டிரைக்கோடெர்மா விரிடி, சூடோமோனாஸ் புளூரசன்ஸ் உள்ளிட்ட உயிரிப் பொருள்களை தூவி, நன்கு கலக்க வேண்டும். மறுநாள் காலையில், மீண்டும் காய்களை பரப்பி, ஆறிய அரிசிக் கஞ்சியை சிறிதளவு தெளித்து, உயிர் உரங்களான அசோஸ்பைரில்லம், பாஸ்போபாக்டீரியாவை ஏக்கருக்கு 1 கிலோ என்ற அளவில் கலந்து, காய்களை கலந்து குவித்து வைத்து, அரை மணி நேரம் கழித்து நடவு செய்ய வேண்டும்.

இவ்வாறு செய்வதன் மூலம், விதைக் காய் மண்ணில் உள்ள நோய் ஏற்படுத்தும் பூஞ்சைகள், பாக்டீரியாவிடமிருந்து பயிரைப் பாதுகாக்கலாம். சூடோமோனாஸ் ஒரு வளர்ச்சி ஊக்கியாக செயல்பட்டு பயிரின் வளர்ச்சியை துரிதப்படுத்துகிறது. உயிர் உரங்களான அசோஸ்பைரில்லம் காற்றிலுள்ள தழைச்சத்தை பயிருக்கு அளிக்கிறது. பாஸ்போ பாக்டீரியா மண்ணில் கிடைக்காத நிலையில் உள்ள மணிச்சத்தை, கிடைக்கும் நிலைக்கு மாற்றி அளிக்கிறது.

எனவே, நோய் வரும்முன் காக்கும் விதமாகவும், இயற்கையிலேயே கிடைக்கக்கூடிய சத்துக்கள் பயிரிக்கு எளிதாக கிடைப்பதற்கும் சிறிய வெங்காய விதைக் காய்களை நேர்த்தி செய்து நடவு செய்ய வேண்டும் என்றார் அவர்.

தினமலர்

**காய்கறி சாகுபடி பயிற்சி முகாம்**

பதிவு செய்த நாள் : நவம்பர் 24,2010,00:59 IST

திண்டிவனம் : திண்டிவனம் எண் ணெய் வித்துக்கள் ஆராய்ச்சி நிலையத்தில் காய்கறி சாகுபடி சுய தொழில் முனைவதற்கான பயிற்சி முகாம் நடந்தது. முகாமிற்கு ஆராய்ச்சி நிலையத்தின் பேராசிரியர் மற்றும் தலைவர் டாக்டர் ராமமூர்த்தி தலைமை தாங் கினார். பூச்சியியல் துறை உதவி பேராசிரியர் ராதாகிருஷ்ணன் வரவேற்றார்.

இம்முகாமில் காய்கறி வளர்ப்பின் முக்கியத்துவம், காய்கறியின் சத்துக் கள் மற்றும் குணாதிசயங் கள், காய்கறி சாகுபடியில் நுண்ணுயிர் உரத்தின் பங்கு, மண்வள மேலாண்மை மற்றும் உர நிர்வாகம், நாற்றங்கால் தேர்வு, விதை நேர்த்தி உள்ளிட்டவை குறித்து பயிற்சி அளிக் கப் பட்டது. பின்னர் நோய் மேலாண்மை, பூச்சி மேலாண்மை, வயல்வெளி கல்வி, நீர் மேலாண்மை, காய்கறி பயிர்களில் வினையூக்கிகளின் பங்கு, வீட்டுத் தோட்டம் மற்றும் காய்கறி பயிர்களில் மதிப்பூட்டப் பட்ட பொருட்கள் தயாரித் தல், காய்கறி ஏற்றுமதி ஆகிய தலைப்புகளில் மகளிர் சுய உதவிக்குழுவினருக்கு பயிற்சி அளிக்கப் பட்டது. உதவி பேராசிரியர் தமிழ்ச்செல்வி, உழவியல் துறை உதவி பேராசிரியர் அன்புமணி ஆகியோர் விளக்கவுரையாற்றினர். மண்ணியல்துறை உதவி பேராசிரியர் பாலமுருகன் நன்றி கூறினார்.

**மேட்டூர் நீர்மட்டம் 113 அடியாக உயர்வு**

பதிவு செய்த நாள் : நவம்பர் 24,2010,02:57 IST

மேட்டூர்: தொடர் நீர்வரத்து காரணமாக மேட்டூர் அணை நீர்மட்டம் நேற்று 113 அடியாக உயர்ந்தது. மேட்டூர் அணை நீர்வரத்து அதிகரித்ததால் அக்டோபர் 29 ம் தேதி 60 அடியாக இருந்த நீர்மட்டம் நவம்பர் 12ம் தேதி 100 அடியாகவும், நேற்று 113.310 அடியாக உயர்ந்தது. கடந்த 25 நாளில் அணை நீர்மட்டம் 53 அடியும், நீர் இருப்பு 58 டி.எம்.சி.,யும் அதிகரித்துள்ளது.

நேற்று அணைக்கு விநாடிக்கு 15 ஆயிரத்து 221 கனஅடி நீர்வந்தது. டெல்டா மாவட்டங்களில் மழை நீடிப்பதால் அணையில் இருந்து சம்பா பாசனத்திற்கு நீர் திறக்கப்படவில்லை. சேலம், நாமக்கல், ஈரோடு மாவட்டங்களில் மழை நீடிப்பதால் அணையில் இருந்து மேட்டூர் கால்வாய் பாசனத்திற்கான நீரும் நிறுத்தப்பட்டது.

## இயற்கை முறை விவசாயத்துக்கு 500 ஏக்கரில் கூட்டுப்பண்ணை

பதிவு செய்த நாள் : நவம்பர் 24,2010,01:07 IST

அன்னூர்: "பழநி அருகே 500 ஏக்கரில் சமத்துவ கூட்டுப் பண்ணை அமைக்கப்படுகிறது' என இயற்கை விவசாயிகள் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது. அன்னூரில் இயற்கை முறை விவசாயிகளுடன் கலந்துரையாடல் நடந்தது. இதில் இயற்கை விவசாயிகள் கூட்டமைப்பு நிர்வாகி தூரன் நம்பி பேசியதாவது: பசுமைப்புரட்சி என்னும் பெயரில் அதிக அளவில் ரசாயன உரம், பூச்சிக்கொல்லி மருந்து, வீரிய விதைகளை பயன்படுத்தியதால் நிலம் இறந்து விட்டது. நிலத்தில் இருந்த மண் புழு, நுண்ணுயிர்கள் காணாமல் போய் விட்டன. மண்ணில் சத்துக்கள் குறைந்து விட்டது. ரசாயன உரங்களை பயன்படுத்தி விளைவிக்கப்படும் பொருட்களில் ரசாயனத்தின் அளவு நாளுக்கு நாள் அதிகரிக்கிறது.

இதை உட்கொள்வோரும் பல்வேறு நோய்களுக்கு ஆளாகின்றனர். "பி.டி.,'ரக பருத்தி சில காய்ப்புழுக்களை மட்டுமே கட்டுப்படுத்தப்படுகிறதே தவிர வேறு பெரிய பலன்கள் இல்லை. அதில் கிடைக்கும் அளவு பருத்தியை, அதை விட குறைந்த செலவில் இயற்கை முறை விவசாயத்தில் பெற முடியும். மகாராஷ்டிராவைச் சேர்ந்த சுபாஷ் பாலேக்கர் அறிமுகப்படுத்திய இயற்கை விவசாயத்துக்கு விவசாயிகளிடம் வரவேற்பு கிடைத்துள்ளது. பல ஊர்களில் விவசாயிகள் இயற்கை விவசாயத்துக்கு திரும்பியுள்ளனர். ஒரு பசு மாடு இருந்தால் அதன்மூலம் ஜீவாமிர்தம் தயாரித்து, 20 ஏக்கருக்கு தேவையான சத்துக்களை தர முடியும். பழநி, குதிரையாறு அணை அருகில் ஜாதி, மத வித்தியாசம் இல்லாமல் விவசாயிகள் தலா ஐந்து ஏக்கர் வாங்கி ஒன்றிணைந்து 500 ஏக்கரில் சமத்துவ கூட்டு பண்ணை அமைக்கிறோம். இந்த பண்ணையில் முழுக்க முழுக்க இயற்கை முறையில் விவசாயம் செய்யப்படும்.

நாடு முழுவதும் உள்ள விவசாயிகளுக்கு இங்கு மாதம் ஒரு முறை செயல்விளக்க பயிற்சி அளிக்கவும், விவசாயிகளிடம் இயற்கை விவசாயத்தை கொண்டு செல்லவும் திட்டமிட்டுள்ளோம். இவ்வாறு தூரன் நம்பி பேசினார். உழவர் உழைப்பாளர் கட்சி ஒன்றிய தலைவர் சுந்தரமூர்த்தி, சூலூர் வட்டார தலைவர் பாலசுப்ரமணியம் உள்பட விவசாயிகள் பலர் பங்கேற்றனர்.

**மழையால் தக்காளி செடிகள் நாசமடைந்ததால்: வருத்தத்தில் விவசாயிகள்**

பதிவு செய்த நாள் : நவம்பர் 23,2010,01:55 IST

கிணத்துக்கடவு: தற்போது பெய்து வரும் பருவ மழையால் கிணத்துக்கடவு மேற்கு பகுதிகளில் தக்காளி செடிகள் நாசமடைந்துள்ளன. இதனால் சாகுபடி செய்த தொகை கூட கிடைக்காமல் விவசாயிகள் சோகமடைந்துள்ளனர். மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதியில் பருவமழை பெய்து வருகிறது. பொள்ளாச்சி பகுதியில் மழை பெய்துள்ளது. கிணத்துக்கடவு மேற்கு பகுதிகளான வடபுதூர், சிங்கையன்புதூர், சொக்கனூர், வீரப்பகவுண்டனூர், பாலார்பதி, முத்துக்கவுண்டனூர், ரங்கேகவுண்டனூர் உட்பட பல கிராமங்களில் நூறு எக்டர் நிலப்பரப்பில் கடந்த ஆடி மற்றும் ஆவணி மாதங்களில் தக்காளிகள் நடவு செய்யப்பட்டன.

இதனை தொடர்ந்து புரட்டாசி மற்றும் ஐப்பசி மாதங்களில் தக்காளி காய்ப்புக்கு வந்துள்ளது. இரண்டு நாட்களுக்கு ஒரு முறை தக்காளி செடியில் இருந்து தக்காளி 10 கிலோ எடையுள்ள 70 முதல் 90 கூடைகள் வரை தக்காளி கிடைத்து வந்தது. இந்நிலையில், கடந்த ஒரு வாரமாக புயல் மழை பெய்தது. அதற்கு முன் பனிப்பொழிவு ஏற்பட்டது. இதில், தக்காளி செடியில் இருந்து பூக்கள் உதிர்ந்தன. பின் தக்காளி செடிகள் கருகிவிட்டன. இச்செடியில் உள்ள தக்காளிகளை மட்டுமே விவசாயிகள் பறித்து வருகின்றனர். இதன் பின், தக்காளி செடிகளை அழிக்க வேண்டிய நிலையில் விவசாயிகள் உள்ளனர். ஒரு ஏக்கர் நிலப்பரப்பில் தக்காளி சாகுபடி செய்த நாளில் இருந்து, தக்காளி செடி அருகே குச்சி நட்டு, தக்காளி செடியை கம்பியால் குச்சி மூலம் இழுத்து கட்டப்பட்டும்.

தக்காளி காய்ப்புக்கு வருவதற்கு முன் மருந்து அடிப்பது, விவசாய கூலி வேலைக்கு வரும் ஆண்களுக்கு தினமும் 200 ரூபாயும், பெண்களுக்கு 130 ரூபாயும் வழங்கப்பட்டு தக்காளி சாகுபடி செய்துள்ளனர். இதற்கு குறைந்தது ஒரு ஏக்கர் நிலத்தில் தக்காளி சாகுபடி செய்வதற்கு 30 ஆயிரம் ரூபாய் வரை செலவாகிறது. காய்ப்புக்கு வந்த தக்காளி செடியில் இருந்து பத்துமுறை மட்டுமே தக்காளி பறிக்கப்பட்டுள்ளது. இத்தக்காளி விலையும் கிலோ ஒன்றுக்கு ரூ.6 மட்டுமே மார்க்கெட்டில் ஏலம் சென்றது. இதனால், தக்காளி சாகுபடியால், விவசாயிகளுக்கு லாபம் கிடைக்கவில்லை. கன மழையால் தக்காளி செடிகள் முழுவதும் நாசமடைந்துள்ளன. இச்செடிகளில் தக்காளிகள் பழுத்தும், பழுக்காமல் உள்ளன. இதில், பழுத்த தக்காளியை மட்டுமே விவசாயிகள் பறித்து வருகின்றனர். பழுக்காத செடிகளை அப்படியே செடிகளில் விட்டுள்ளனர். மீண்டும் தக்காளி சாகுபடி செய்ய விவசாயிகள் தயங்குகின்றனர்.

இதற்கு, வரும் மாதங்களில் கடுமையான பனிப்பொழிவு இருக்கும். அப்போது, தக்காளி செடிகள் கருகியும், தக்காளி செடிகளில் வரும் பூக்கள் உதிர்ந்து விடும். இதனால், இந்த ஆண்டு தக்காளி சாகுபடி இத்துடன் நிறுத்தி கொண்டுள்ளனர். இந்த ஆண்டு துவக்கம் முதல் தக்காளிக்கு பெரிய அளவில் விலையும் கிடைக்கவில்லை. தக்காளி காய்ப்புக்கு வந்துள்ள நிலையில், மழை காரணமாக முற்றிலும் தக்காளி செடிகள் அழிந்துள்ளதால் விவசாயிகள் கவலையடைந்துள்ளனர். ஒவ்வொரு தக்காளி விவசாயிகளுக்கும் சாகுபடி செய்த தொகை கூட கிடைக்காமல் கடும் நஷ்டத்திற்குள்ளாகியுள்ளனர்.

**திராட்சை விவசாயிகளுக்கு நோய் முன் அறிவிப்பு திட்டம்**

பதிவு செய்த நாள் : நவம்பர் 23,2010,22:53 IST

கம்பம் : கம்பம் பள்ளத்தாக்கில் உள்ள திராட்சை விவசாயிகளுக்கு "நோய் முன் அறிவிப்பு திட்டம்' செயல்படுத்த தோட்டக்கலைத்துறை நடவடிக்கை எடுக்க வேண்டும் என புனே தேசிய திராட்சை ஆராய்ச்சி நிலையத்தின் முதன்மை விஞ்ஞானி சாவந்த் பேசினார். காமயகவுண்டன்பட்டியில் நடந்த திராட்சை விவசாயிகள் கருத்தரங்கில் அவர் பேசியதாவது; கம்பம் பகுதியில் கடந்த ஒரு வாராமாக மழை பெய்த போதும், திராட்சை விவசாயிகள் நோய் தாக்குதலை நல்ல முறையில் சமாளித்துள்ளனர். செவட்டை நோயை கட்டுப்படுத்த ஏழு நாட்களுக்கு முன்பே சீதோஷ்ண நிலை பற்றி தெரிவிக்க வேண்டும். மழை காலங்களில் பூச்சி மருந்து தெளிப்பதை தவிர்க்க வேண்டும்.

விவசாயிகள் பயன்பெற மகாராஷ்டிரா மாநிலத்தில் உள்ளது போன்று "நோய் முன் அறிவிப்பு திட்டம்' செயல்படுத்தப்பட வேண்டும். அதற்கு தோட்டக்கலைத் துறை நடவடிக்கை எடுக்க வேண்டும். 110 நாட்களில் அறுவடை செய்யப்படும் மஞ்சரி நவீன் மற்றும் ரெட் குளோப் ரகங்கள் இப்பகுதிக்கு ஏற்றதாக இருக்கும். பழங்களில் வெடிப்பு ஏற்படுவதை தவிர்க்க நீர் மேலாண்மை அவசியம். சொட்டு நீர் பாசனம் நல்லது. ஒயின் தயாரிப்பிற்கென தனி ரகங்கள் உள்ளது. பழம் எடுப்பதை ஒரு வாரம் தள்ளி எடுத்தால் இனிப்பு தன்மை 20 முதல் 24 பிரிக்ஸ் அதிகரிக்கும் என்றார்.

**உளுந்துக்கு டி.ஏ.பி. கரைசல் தெளிப்பு முகாம்**

பதிவு செய்த நாள் : நவம்பர் 24,2010,01:22 IST

தென்காசி : சங்குபுரத்தில் பயறு மகசூல் அதிகரிப்பு செய்ய டி.ஏ.பி.கரைசல் தெளிப்பு முகாம் நடந்தது. வாசுதேவநல்லூர் வட்டாரம் சங்குபுரத்தில் நீர்வள நிலவள திட்டத்தின் கீழ் உளுந்து பயிருக்கு டி.ஏ.பி.தெளிப்பு செயல் விளக்க பயிற்சி முகாம் நடந்தது. முன்னாள் பஞ்.,தலைவர் செல்லமுத்தையா பாண்டியன் முன்னிலை வகித்தார். வேளாண்மை உதவி இயக்குநர் பெருமாள் வரவேற்றார்.

மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் தேவசகாயம் பேசும் போது, நீர்வள நில வள திட்டத்தில் நடப்பு நிதியாண்டில் கலிங்கலாறு உபவடிநில பகுதியில் சங்குபுரத்தில் 25 ஹெக்டேர் பரப்பில் உளுந்து சாகுபடி செயல் விளக்க திடல்கள் அமைக்கப்பட்டுள்ளது. தற்போது பயிறு வகை பயிர்கள் பூக்கும் தருவாயில் உள்ளதால் 2 சத டி.ஏ.பி.உர கரைசலை மாலை வேளையில் தெளிக்க வேண்டும். மீண்டும் 15 நாட்கள் கழித்து 2 சத டி.ஏ.பி.கரைசலை தெளித்து பயிறு வகை பயிர்களில் அதிக மகசூல் பெறலாம் என்றார்.

வேளாண்மை துணை இயக்குநர் (மாநில அரசு திட்டங்கள்) துரைப்பாண்டியன் பேசும் போது, விவசாயிகள் தவறாது பயிர் இன்சூரன்ஸ் திட்டத்தில் சேர்ந்து பயனடைய வேண்டும் என்றார். மேலும் அவர் தேசிய வேளாண் காப்பீட்டு திட்டம், வானிலை சார்ந்த காப்பீட்டு திட்டம் மற்றும் தென்னை காப்பீட்டு திட்டம் பற்றியும் விளக்கினார். வேளாண்மை அலுவலர் ரவிச்சந்திரன் நன்றி கூறினார். ஏற்பாடுகளை உதவி வேளாண்மை அலுவலர்கள் செல்லையா, சரவணகுமார், ஆறுமுகம், அண்ணாதுரை செய்திருந்தனர்.

**நவீனதொழில்நுட்பம்**

பதிவு செய்த நாள் : நவம்பர் 24,2010,00:00 IST



**நன்னீரில் இறால் வளர்ப்பு:** தண்ணீர் வாழ் இறால்கள் பலவகை இருப்பினும் குறுகிய காலத்தில் கூடுதலாக வளர்ச்சி, கண்ணைக்கவரும் தோற்றம் ஆகிய நன்மையால் நீலக்கால் இறால் மற்றும் மோட்டு இறால் ஆகிய இரு ரகங்களை மட்டுமே தனியாகவோ அல்லது கெண்டை மீன்களுடன் சேர்த்தோ வளர்க்கலாம். நீர்நிலைகளுக்கு அருகில் தேர்வு செய்யப்பட்ட இடத்தில் ஒரு மீட்டர் ஆழத்திற்கு மணல், வண்டல், களிமண் கலவை 1.5 : 1 : 1.5 என்ற விகிதத்தில் ஒவ்வொரு குளமும் 1000 முதல் 5000 சதுரமீட்டர் பரப்பளவில் செவ்வக வடிவத்தில் அமைக்க வேண்டும். ஒவ்வொன்றிலும் உள்மடை, வெளிமடை அமைக்க வேண்டும். சுலபமாக இறால் பிடிக்க வெளிமடைக்கு அருகே 2 மீட்டர் விட்டமும், ஒரு மீட்டர் ஆழமும் உள்ள இறால் பிடிகுழி ஒன்று தயார் செய்ய வேண்டும். குளக்கரை சரிவு 1 : 1.5 என்ற விகிதத்தில் அமைக்க வேண்டும்.

**குளம் தயார் செய்தல்:** நிலத்தை நன்றாக காயவைத்து உழவேண்டும். 500 கிலோ நீர்த்த சுண்ணாம்பு இடவேண்டும். கார அமிலத்தன்மை 7.5 முதல் 8.5 வரை உயர்த்த வேண்டும். மாட்டுச்சாணம், கோழிக்கழிவு குளத்தில் இட்டு, குளத்தின் நீர்மட்டம் 30 செ.மீ. அளவில் இருக்கச் செய்ய வேண்டும். 100 கிலோ யூரியா, 250 கிலோ சூப்பர் பாஸ்பேட்டை அடியுரமாக முதல் தவணையாக போடவேண்டும். 15 நாட்கள் கழித்து நீரின் நிறம் பசுமையாக மாறியதும் நீர்மட்டத்தை 1 மீட்டருக்கு உயர்த்தி அதை அறுவடைக்காலம் வரை பராமரிக்க வேண்டும்.

**இறால் குஞ்சு இருப்பு வைத்தல்:** தனியார் மற்றும் அரசு இறால் குஞ்சு பொரிப்பகங்களிலிருந்து நன்னீர் இறால் குஞ்சுகளைப் பெற்று எக்டருக்கு 50,000 வரை இருப்பு செய்யலாம். இருப்பு செய்வதற்கு முன் நாற்றங்கால் சூழ்நிலையில் வைத்து இரு வாரங்களுக்கு உணவு கொடுத்து பின்னர் விட்டால் பிழைப்பு விகிதங்கள் கூடும்.

**இருப்பு செய்தபின் பராமரிப்பு:** இருப்பு செய்த பின்னர் குளத்துநீரைப் பாதுகாப்பது முக்கியம். நீரில் கரைந்துள்ள ஆக்சிஜன், கார அமிலத்தன்மை மற்றும் மிதக்கும் உயிரினங்களின் உற்பத்தியைத் தொடர்ந்து கண்காணிக்க வேண்டும். வெப்பம் 26-32 டிகிரி செல்சியஸ், ஆக்சிஜன் 5 மி.கி/லிட்டர் இருந்தால் இறால்கள் நன்கு வளரும். நீரில் பிராணவாயு அளவை சரியாக பராமரிக்க காற்றூட்டும் சாதனத்தை உபயோகிக்கலாம்.

**தீவனம்:** ஈரமாகவோ, காய்ந்த நிலையிலோ உணவைக் கொடுக்கலாம். காய்ந்த நிலையில் இறால் உணவு செய்வதற்கு மீன், நிலக்கடலை, அரிசி குருணை, கோதுமைப் புண்ணாக்கு, மரவள்ளிக்கிழங்கு மாவு ஆகியவை கலப்பு பொருளாக உபயோகப்படுத்தப்படுகிறது. தனியார் வர்த்தக நிறுவனங்கள் இறால் தீவனத்தை முறுக்கு, வற்றல் வடிவத்தில் தயாரித்து விற்பனை செய்வதை வாங்கியும் பயன்படுத்தலாம்.

**அறுவடை மற்றும் விற்பனை:** 5 மாதங்களில் இறால் சராசரி 50 கிராம் அளவில் வளர்ந்துவிடும். நீளக்கால் இறால்கள் அதிகபட்சம் 250 கிராம் வளர்ச்சி அடையும். இறால்களைப் பிடிப்பதற்கு தண்ணீரை வடித்த பின்னர் இழுவலை அல்லது வீச்சு வலையை உபயோகிக்கலாம். நீரை

முழுமையாக வெளியேற்றிய பின்னர் கை தடவல் முறையிலும் பிடிக்கலாம்.

**பொருளாதாரம்:** ஒரு எக்டரில் (நீர்பரப்பு) - நிலம், கிணறு, காற்றூட்டி, மின் இணைப்பு, தங்கு அறை வரையில் செலவு சுமார் ரூ.2 லட்சம்.

செயல்முறை செலவுகள்: இறால் குஞ்சு விலை, தீவனம், உரம் மற்றும் இதர செலவுகள் ரூ.3 லட்சம்.

**வருமானம்:** 5 மாதங்களில் அறுவடை சராசரி வளர்ச்சி 50 கிராம் வீதம் 1500 கிலோ இறால் விற்பனை ரூ.3.75 லட்சம். ஒரு அறுவடைக்கு நிகர லாபம் ரூ.1.75 லட்சம். இரு அறுவடை (ஒரு ஆண்டில்) நிகரலாபம் ரூ.3.5 லட்சம். **(தகவல்: வேளாண் அறிவியல் நிலையம், குன்றக்குடி-630 206. 04577-264 288. -டாக்டர் கு.சௌந்தரபாண்டியன்**

## செம்மறி ஆடு பராமரிப்பு முறைகள்

பதிவு செய்த நாள் : நவம்பர் 24,2010,00:00 IST



சரியான பராமரிப்புடன் சினை ஆடுகளை வளர்த்தால், ஈனும் குட்டிகளின் எண்ணிக்கை அதிகரிப்பதோடு அவற்றை நல்ல ஆரோக்கியத்துடன் வளர்க்க முடியும். அதற்கு கீழ்க்காணும் வழிமுறைகளைப் பின்பற்றுவது அவசியம்.

* குட்டி ஈனும் தருணத்தில் உள்ள சினை ஆடுகளை தனிக் கொட்டிலில் வைத்துக் கவனத்துடன் வளர்க்க வேண்டும்.

* சினை  ஆடுகளை ஊசி போடுதல், மருந்தளித்தல் என அடிக்கடி தொந்தரவு கொடுத்தல் கூடாது. முடிந்தவரை தடுப்பூசி மருந்துகளை ஓரிரு தடவைகளில் போட்டு முடித்துவிடுதல் நலம்.

* குட்டி ஈனுதற்கு 3-4 வாரங்கள் முன் அதிக அளவில் அடர்தீவனமும் அளிக்க வேண்டும். அவ்வாறு அளித்தால் குட்டி ஈன்றவுடன் பால் சுரப்பு அதிகமாக இருக்கும்.

* சரியான தீவனம் அளிக்கப்படவில்லையெனில் கரு கலைதல், குட்டி இறந்து பிறத்தல், ரத்தத்தில் விஷத்தன்மை போன்ற பிரச்னைகள் ஏற்படலாம்.

* ஈன்ற குட்டிகளை 4-6 நாளில் தாயிடமிருந்து பிரித்துக் குட்டிகளின் கொட்டிலில் வளர்க்க வேண்டும். முடிந்தவரை குட்டிகளுக்கு மென்மையான தரை அமைப்பு கொண்ட தனித்தனி கொட்டில் அமைத்தல் நலம்.

* குட்டி ஈன்ற ஆடுகளின் பால் தரும் காலத்தைக் கவனித்துக் குறித்து வைத்தல் நலம். பொதுவாக 142-150 நாட்கள் வரை இருக்கும். இதைவிடக் குறைவாக இருந்தால் பால் தரும் நாட்களின் எண்ணிக்கை குறைவாக இருக்கும்.

* குட்டிகளை குளிர், பனி, மழை, வெயிலிலிருந்து முறையாகப் பாதுகாக்க வேண்டும்.

குட்டி ஈனும்போது கவனிக்க வேண்டியவை:

* குட்டி ஈனும் தருணத்தில் ஆடானது மந்தையிலிருந்து பிரிந்துவிடும்.

* ஆடு அமைதியற்று, மடி பெருத்து, பெண் இனப்பெருக்க உறுப்புகள் சிவந்த வண்ணம் காணப்படும்.

* பொதுவாக ஆரோக்கியமான ஆடுகளில் குட்டி ஈனுதல் தானாகவே நடக்கும் எனினும் கீழ்க்காணும் நடவடிக்கைகளை எடுப்பது நன்மையாகும்.

குட்டிகளைப் பிரித்துப் பாதுகாத்தல்:

* 90 நாட்களில் குட்டியைத் தாயிடமிருந்து பிரித்துவிட வேண்டும். பால் உற்பத்தி தாய் ஆட்டிடம் குறைவாக இருக்கும் பட்சத்தில் 60 நாட்களிலேயே பிரித்துவிடுதல் நலம்.

* தாய்ப்பாலுக்குப் பதில் வேறு கலப்புத் தீவனங்கள் அல்லது கொழுப்பு நீக்கப்பட்ட பால் அளித்தல் அவசியம்.

* முள், குழி, அதிகக் கற்கள் கொண்ட பகுதிகளில் குட்டிகளை மேயவிடுதல் கூடாது. ஏனெனில் அவற்றுக்குக் கண் எரிச்சல், ஒவ்வாமை மற்றும் ரோமம் பாதிக்கப்பட வாய்ப்புண்டு.

இந்திய விவசாயிகள் ஆடுமாடு வளர்ப்பதென்பது அவர்களின் வாழ்க்கைக்கான ஆதாரம். ஏறத்தாழ எட்டு கோடி விவசாயப் பெண்கள் ஓரிரு மாடுகளை வைத்துப் பால் உற்பத்தியில் ஈடுபட்டுத் தமது குடும்பத்தை நடத்தி வருகின்றனர். கிராமப்புறங்களிலுள்ள 70 சதவீத கால்நடைகள் நிலமற்ற கூலி ஏழை விவசாயிகளிடமும் நடுத்தர விவசாயிகளிடமும்தான் உள்ளது. கால்நடை சார்ந்த பொருட்கள் இக்கிராமப்புற விவசாயிகளின் ஆண்டு வருமானத்தில் 20 முதல் 70 சதவீதம் வரை பங்களிக்கிறது. இயற்கை பொய்த்துப் போகும்போதும் விவசாய விளைபொருட்களின் விலை சந்தையில் வீழ்ச்சியடையும்போதும் விவசாயிகளின் வாழ்க்கைக்கு உத்திரவாதம் கொடுத்து காப்பவை இக்கால்நடைகள்தான். கிராமப்புறங்களில் அவசரத் தேவைக்கான வங்கிகளாக இருப்பவை இக்கால்நடைச் செல்வங்கள்தான்.

**-எம்.அகமது கபீர், வேளாண்மை ஆலோசகர், 93607 48542**.

**சின்னச்சின்ன செய்திகள்**

பதிவு செய்த நாள் : நவம்பர் 24,2010,00:00 IST

**வெட்டிவேர்:** இயற்கை முறையில் சாகுபடி செய்துவரும் ராஜகோபாலன் கூறுவது: இது ஒரு லாபகரமானபயிர். இதற்கு அதிக ஆள் தேவையில்லை. அதிக தண்ணீர் தேவையில்லை. அதிக வெயில் தேவையில்லை. அப்படியே அதிக தண்ணீர், அதிக வெயில் இருந்தாலும் அதனால் பெரிய பாதிப்பு இல்லை. வெட்டிவேர் புல்லானது நல்ல மருத்துவகுணம் உள்ளதால் இதற்கு சந்தையில் நல்ல கிராக்கி இருக்கிறது. பயிர் செய்வதற்கு தேவையான இயற்கை முறையில் விளைவிக்கப்பட்ட 50,000 வெட்டிவேர் நாற்றுகள் விலைக்கு உள்ளன. வேண்டுவோர் தொடர்புகொள்ள வேண்டிய முகவரி: **வீ.ராஜகோபாலன், ஸ்ரீதேவி மெடிக்கல்ஸ், திருவளப்பாடி, அத்தாணி, அறந்தாங்கி வட்டம், புதுக்கோட்டை-614 630. 04371-244 408.**
மஞ்சள் கிழங்கு பாலிஷ் செய்ய மானிய விலையில் இயந்திரம் வாங்க நறுமணப் பொருட்கள்வாரியம் மானியம் வழங்கி வருகிறது. 16 ஆயிரம் ரூபாய் வரை மானியம் வழங்குகிறது. இது தனிப்பட்ட நபர்களுக்கு வழங்கப்படுவதில்லை. சுய உதவிக்குழுவினர், தொண்டு நிறுவனங்கள், கூட்டுறவு அமைப்புகள் போன்றவற்றிற்குத்தான் வழங்கப்படுகிறது. தமிழகத்தில் வாசனைப் பொருட்கள் வாரியத்தின் கள அலுவலகம் போடிநாயக்கனூர் மற்றும் கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் செயல்பட்டு வருகின்றன. வாரியம் செயல்படுத்தி வரும் திட்டங்கள் குறித்து இங்கு விபரங்கள் பெறலாம். தொடர்புக்கு:  போடிநாயக்கனூர் - 04546-280 317, கோயம்புத்தூர்-0422-247 4430.

**ஸ்ட்ரா கம்பைன் இயந்திரம்**

பதிவு செய்த நாள் : நவம்பர் 24,2010,00:00 IST



காட்டுக் கருவேல மரங்களின் விறகு மற்றும் கரிக்காக அம்மரங்களை வெட்டி பயன்படுத்துகின்றனர். அம்மரங்கள் சமீப காலமாக மின்சாரம் தயாரிக்க கொண்டு செல்லப்படுகிறது. அம்மாதிரி அவை வெட்டப்பட்டு தேவையான கட்டைகளை எடுத்துக்கொண்டு மீதி அம்மரத்தின் முள் கழிவுகள் தீயிட்டுக் கொளுத்தப்படுகிறது. அவ்வாறு யாருக்கும் பயன்படாமல் தீயிட்டுக் கொளுத்தாமல் மீண்டும் சக்தியாக மாற்ற வேண்டும் என முடிவெடுத்து ஒரு இயந்திரத்தை தயாரித்து உள்ளோம்.

**இவ்வியந்திரத்தின் பயன்கள்:**

* இதுவரை இம்முள் கழிவுகள் வேறு எந்த உபயோகத்திற்கும் எடுக்கப்படவில்லை. இந்த இயந்திரத்தின் மூலம் வருடத்திற்கு சுமார் 2,500 டன் கழிவுகள் மீண்டும் சக்தியாக மாற்றப்படுகிறது.

* தீயிட்டுஅழிப்பதால் காற்று மண்டலம் மாசுபடுகிறது. அதிலிருந்து முழுவதுமாக காற்றுமண்டலம் மாற்றப்படுகிறது.

* தினசரி ஒரு இயந்திரத்திற்கு 10 நபர்களுக்கு புதிய வேலை வாய்ப்புகள்.

* கிராமப்புறத்தில் டிராக்டர் உள்ள விவசாயிகளின் வருமானம் கூடுகிறது.

* இதன்மூலம் கிராமப்புற பெண்களுக்கு வேலைவாய்ப்பு உருவாகிறது.

* படித்த வேலையில்லா இளைஞர்களுக்கு சுயவேலைவாய்ப்பு பெருகுகிறது.

* வருடத்திற்கு சுமார் 50 கோடி அளவில் இம்மாவட்டத்தில் மட்டும் பொருளாதாரம் பெருகுகிறது.

* இக்கழிவுகள் மீண்டும் உபயோகத்திற்கு வருவதால் எரிசக்தி உபயோகப்படுத்தும் தொழிற்சாலைகள் மேலும் பெருக வாய்ப்புள்ளது.

* இதுபோல் மரவள்ளிக்கிழங்கு குச்சி, சவுக்கு கழிவுகள், மூங்கில் கழிவுகள் மற்றும் இதர மரக்கழிவுகள் இவற்றை அரைக்கவும், இந்த இயந்திரம் பயன்படும்.

இந்த இயந்திரத்தின் மூலம் அரைத்து வெளிவரும் குச்சிகள் மின்சாரம் தயாரிக்கவும், பேப்பர் மில், அரிசி ஆலை, சாயப்பட்டறைகள், உணவு விடுதிகள் மற்றும் அனைத்து பாய்லர் அடுப்புகளுக்கும் மிக சக்திவாய்ந்த எரிபொருளாக பயன்டுபடுத்தலாம்.

**தொடர்புக்கு: ஐ.பன்னீர்செல்வம், கண்ணப்பன், 94433 23185, 93458 10555.**

**-கே.சத்தியபிரபா, உடுமலை.**

விவசாயிகளுக்கு ஆதரவாக மேலும் சில பயிர்களுக்கு காப்பீட்டு வசதி வருகிறது



சுதானுகா கோசல்

கொல்கத்தா

விவசாயிகளுக்கு ஆதரவு அளிக்கும் வகையில் மேலும் சில பயிர்களுக்கு காப்பீட்டு வசதி அளிக்க இந்திய விவசாய காப்பீட்டு நிறுவனம் (ஏ.ஐ.சி) திட்டமிட்டுள்ளது. இது விவசாயிகளுக்கு ஊக்கமளிக்கும் செய்தியாகும். நறுமண மற்றும் மூலிகைப் பயிர்களுடன், கரும்பு, தேயிலை மற்றும் பாசுமதி அரிசி வகைகளுக்கும் காப்பீடு அளிப்பது குறித்து தீவிர பரிசீலனை செய்து வருகிறது. ஒப்பந்த அடிப்படையிலான விவசாயத்தில் சாகுபடி செய்யப்படும் பயிர்களுக்கும் காப்பீட்டு வசதி கிடைப்பதற்கு வாய்ப்புள்ளது.

தற்போது ஏ.ஐ.சி. நிறுவனம் கோதுமை, மாமரங்கள், உருளைக்கிழங்கு, கசகசா, திராட்சை, தேங்காய், ரப்பர், மரக்கூழ், எரிபொருள் தரும் தாவரங்களுக்கு காப்பீட்டு வசதி அளித்து வருகிறது. இத்திட்டத்தை மேலும் விரிவுபடுத்தும் வகையில் ஏ.ஐ.சி. நிறுவனம் மாநில அரசுகளுடன் கலந்தாலோசித்த பிறகு, சில திருத்தங்களுடன், புதிய பயிர் காப்பீட்டு திட்டம் ஒன்றை உருவாக்கியுள்ளது. இது, மத்திய அரசின் திட்டமாக,

*கடந்த இரண்டு ஆண்டுகளில், சோதனை அடிப்படையில் 50 மாவட்டங்களில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.*

## சர்வதேச அளவில், 2010–ஆம் ஆண்டில் உணவு தானியங்கள் இறக்குமதி ரூ.46 லட்சம் கோடியை தாண்டும்

*இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு*

*புதுடெல்லி*

*சர்வதேச அளவில், நடப்பு 2010–ஆம் ஆண்டில் உணவு தானியங்கள் இறக்குமதி ரூ.46 லட்சம் கோடியை (ஒரு லட்சம் கோடி டாலர்) தாண்டும் என அமெரிக்காவின் உணவு மற்றும் விவசாய அமைப்பு தெரிவித்துள்ளது.*

*பற்றாக்குறை*

*இதற்கு முன்பாக கடந்த 2008–ஆம் ஆண்டில் உலக நாடுகளின் உணவு தானியங்கள் இறக்குமதி அளவுக்கதிகமாக இருந்தது. நடப்பாண்டில் இறக்குமதி அந்த அளவையும் விஞ்சும் என எதிர்பார்க்கப்படுகிறது.*

*உற்பத்தி குறைவாக உள்ள நாடுகளில் உணவு தானியங்களுக்கு பற்றாக்குறை நிலவுகிறது. பொதுவாக அந்த நாடுகள்தான் இறக்குமதியை சார்ந்துள்ளன. நடப்பாண்டில் உலகில் உள்ள ஏழை நாடுகளின் இறக்குமதி செலவினம், சென்ற ஆண்டைக் காட்டிலும் 11 சதவீதம் அதிகரிக்கும் என அமெரிக்க அமைப்பு தெரிவித்துள்ளது.*

*கடந்த ஜூன் மாதத்தில் உலகின் தானிய உற்பத்தி 1.2 சதவீதம் அதிகரிக்கும் என இந்த அமைப்பு முன்னர் மதிப்பீடு செய்திருந்தது. ஆனால் அதற்கு மாறாக உற்பத்தி 2 சதவீதம் சரிவடைந்தது. பருவநிலை சாதகமாக இல்லாததால் உற்பத்தி சரிவடைந்தது என்றும், இதனால் எதிர்பாராத வகையில் அளிப்பும் குறைந்து போனது என்றும் தனது அறிக்கையில் இவ்வமைப்பு குறிப்பிட்டுள்ளது.*

*சர்வதேச அளவில் உணவு தானியங்கள் கையிருப்பு குறைந்து வருகிறது. எனவே, உற்பத்தியை அதிகரிக்க வேண்டியது அவசியம் என அமெரிக்க உணவு மற்றும் விவசாய அமைப்பு அறிவுறுத்தியுள்ளது. பார்லி கையிருப்பு 35சதவீதமும், மக்காச்சோளம் கையிருப்பு 12 சதவீதமும், கோதுமை கையிருப்பு 10 சதவீதமும் குறையும் என மதிப்பீடு*

செய்யப்பட்டுள்ளது. இதனடிப்படையில் ஒட்டுமொத்த அளவில் தானியங்கள் கையிருப்பு 7 சதவீதம் சரிவடையும் என தெரிகிறது. அதே சமயம் நெல் கையிருப்பு 6 சதவீதம் அதிகரிக்க வாய்ப்புள்ளது என அமெரிக்க அமைப்பு தனது அறிக்கையில் கூறியுள்ளது.

விலை அதிகரிக்கும்

உற்பத்தி கணிசமாக அதிகரிக்கப்படாவிட்டால் அடுத்த ஆண்டில் அனைத்து உணவு தானியங்கள் விலையும் அதிகரிக்கும் என மேற்கண்ட அமைப்பு எச்சரித்துள்ளது. குறிப்பாக கோதுமை, சோயாபீன் மற்றும் மக்காச்சோளத்தின் விலை உயரும் என தெரிவித்துள்ளது.